Registered as a NewsPaper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாகம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 11 (27 - 08 - 1992) வியாழக்கிழமை ஓசை 191

## பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு பிரதேச செயலகங்களுக்கு மாற்றம்

பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுகள் சம்பந்தமான சகல நடவடிக்கைகளும் எதிர் வரும் ஜனவரி மாதம் முதல் பிரதேச செயலகங்களுக்கு மாற்றப்படவுள்ளன. தற்போது இந் நடவடிக்கைகள் காணிப்பதிவகங்களுடன் இயங்கும் மேலதிகமாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலேயே இடம்பெற்று வருகின்றன ஜனவரி மாதம் முதல் காணிப் பதிவகங்கள் மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் என்பன பிரிக்கப்பட்டு மேலதிகமாவட்டப்பதிவாளர் அலுவலகங்கள் அவ்வப்பகுதி பிரதேசசெயலகங்களுடன் இணைக்கப்படவுள்ளன. பிரதேச செயலகங்களில் பதில் மேலதிக மாவட்டபதிவாளரொருவரும் அலுவலக விவாகப் பதிவாளரொரு (4ஆம் பக்கம் பார்க்க)

# படைகளின் யுத்த தளபாட இழப்புகள் ஈடுசெய்ய முடியாது அரசு திண்டாட்டம்

## பொருளாதார நெருக்கடியால் எழுந்துள்ள சிக்கல் நிலை

(கொழும்பு)

கடந்த சில மாதங்களில் விடுதலைப் புலிகளுடனான போரில் சிறிலங்கா ஆயுதப்படையினருககு ஏற்பட்டுள்ள ஆயுத தளபாட இழப்புக்களையும், போருக்குத் தேவையான புதிய யுத்த தளபாடங்களையும் கொள்வனவு செய்ய முடியாத நிலையில் சிறிலங்கா அரசாங்கம் உள்ளதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. ஆயுதப் படையினர் தமது தேவைகளை அரசாங்கத்திடம் முன்வைத்து, கொள்வனவு செய்யுமாறு வற்புறுத்தி வருகின்ற போதும், அரசாங்கத்தின் மோசமான பொருளாதார நிலை இதற்கு இடம் கொடுப்பதாக இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களில், விடுதலைப் புலிகளுடனான போரில் டாங்கிகளையும், பல கவச வாகனங்களையும் சிறிலங்கா இராணுவம் இழந்துள்ளது. அத்தோடு, இவ் வருட ஆரம்பத்தில் சீனன் குடா விமானப்படைத் தளத்தில் ஏற்பட்ட பாரிய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் விமானப் படை விமானங்கள், உலங்குவானூர்திகள் என்பன சேதமடைந்ததோடு, ஒபபரேசன் பலவேகய II இன் போது வை-8 விமானம புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டதும் தெரிந்ததே.

இவ்இழப்புக்களை ஈடு செய்யும் வகையிலும் புதிய தளபாடங்களை சேர்த்துக் கொள்ளும் முகமாகவும் புதிய சரக்கு குண்டுவீச்சு விமானங்களை கொள்வனவு செய்யுமாறு விமானப்படை வற்புறுத்தி வருகின்றது. இதேபோன்று யுத்தமுனையில் சேதமடைந்த டாங்கிகளுக்காகவும், மேலதி தேவை குறித்தும் புதியடாங்கிகளையும், கவச வாகனங்களையும் கொள்வனவு செய்யுமாறு இராணுவத் தரப்பும் வற்புறுத்தி வருகின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக் குளத்தில் கெடுபிடி அதிகரிப்பு

(வவுனியா)

சிறிலங்கா இராணுவ உளவாளிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாலும், பயணிகள் மீதான கெடுபிடி அதிகரித்திருபபதனாலும் வவுனியா நகரபபகுதியை நோக்கி போக்கு வரத்தையேற்கொள்ளும் வியாபாரிகள் தொகை மிகவும் குறைந்து காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகிறது.

மேற்படி வியாபாரிகள் தாண்டிக்குளம் ஊடாக நகரத்தை நோககிச் செல்லும் போது பழைய பிறவுண் அன்...

## சிறிலங்கா கடற்படைக்கு புதிய தலைமை அதிகாரி

கமடோர் டி. எ. எம் ஆர். சமரசேகரா (44) சிறிலங்கா கடற்படையின் பிரதம அதிகாரியாக அ...

பட்டதாரியான கொமடோர் சமரசேகரா 1971-ல் சிறிலங்கா கடற்படையில் ...

## கேட்பதெல்லாம் கொடுத்தால் சிங்கள நாடு முடிந்துவிடும்

(மாத்தளை)

தொண்டமான் கேட்பதையெல்லாம் கொடுத்தால் சிங்களநாடு முடிந்துவிடும். நாடும் மக்களும் முடிந்துவிட்டால் பௌத்த மதமும் அழிந்து விடும். அப்போது சிங்களத் தலைவர்கள் என்ன தான் கூறப் போகிறார்கள்.

இவ்வாறு சிங்களவர் பாதுகாபபு அமைப்பின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான காமினி ஜெயசூரியா கூறியுள்ளார்.

கம்புறுப்பிட்டியாவில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், இந்த நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காக வடக்கு, கிழக்கில் சிங்கள இளைஞர்கள் போராட்டம் நடத்திவரும் இன்றைய தருணத்தில் அமைச்சர் தொண்டமான் பல ஆலோசனைகளையும், பிரேரணைகளையும் முன் வைப்பதன் அர்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்று விமானம் மூலம் பருப்புப் பொதிகளைப் போடுவதைக் கண்டு எமது அரசாங்கம் பயந்து போய்விட்டது. இதனால் வெற்றிகரமாக நடைபெற்றுவந்த யுத்தம் நிறுத்தப்பட்டது யுத்தம் நிறுத்தப்பட்ட போதும் நிராயுதபாணிகளானபொலிசாரை புலிகள் தாக்கினர் இது போன்ற தவறான முடிவுகளை நெருக்கிலும் அனுமதிக்க முடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வம்சாவளியினரை கைவிட்டுவிட முடியாது

– பிரேமதாசா

(கண்டி)

''இலங்கையில் வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளி மக்கள் அனைவரும் சந்ததி சந்ததியாக, பரம்பரை பரம்பரையாக இலங்கையிலேயே வாழ்ந்து வருபவர்கள். இவர்கள் இலங்கையையே தாய்நாடாக ஏற்றுக் கொண்டிருகிறார்கள் எனவே இவர்களை நாம் அநாதைகளாக விட்டு விட முடியாது''

இவ்வாறு சிறிலங்கா ஜனாதி

[4ஆம் பக்கம் பார்க்க]

## அடிப்படை வசதிகளின்றி அகதி முகாமில் மக்கள் அவதி

## புதிய தலைமை அதிகாரி

கமடோர் டி. எ. எம் ஆர். சமரசேகரா (44) சிறிலங்கா கடற்படையின் பிரதம அதிகாரியாக அக்டோபர் 5-ம் திகதி பதவியேற்கவுள்ளார். இந் நியமனம் ஜனாதிபதி பிரேமதாசாவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகிறது.

தற்போதைய கடற்படை பிரதம அதிகாரியான றியர், அட்மிரல், எப் என் கியூ, விக்கிரமரத்னா அக்டோபர் 5-ம் திகதி முதல் ஓய்வு பெறவுள்ளார்.

பட்டதாரியான கொமடோர் சமரசேகரா 1971-ல் சிறிலங்கா கடற்படையில் சப். லெப்டினன்டாக சேர்ந்தார். இந்தியாவில் விசேட பயிற்சி பெற்றுள்ளார். 1987-ல் கப்டனாகவும் 1990-ல் கொமடோராயும் பதவி உயர்வு பெற்றார்.

வடக்கு, கிழக்கு. மேல் மாகாணம் ஆகிய மூன்று கடற்படைப் பகுதிகளின் ஆணையிடும் அதிகாரியாய் கடமையாற்றியுள்ளார்.

கின்றமையை அவதானிக்க முடிகிறது.

மேற்படி வியாபாரிகள் தாண்டிக்குளம் ஊடாக நகரத்தை நோக்கிச் செல்லும் போது பழைய பிறவுண் அன் கொம்பனிப் பகுதியிலும், திரும்பி வரும்போது தாண்டிக்குளம் பகுதியிலும் இந்த உளவாளிகளின் கெடுபிடிக்கு உட்பட வேண்டியுள்ளது. (தி)

# அகதி முகாமில் மக்கள் அவதி

(நமது நிருபர்)

மானிப்பாய் பகுதியில் காணப்படும் அகதி முகாம்களில் வாழும் மக்கள் மாற்றுடையின்றியும், குடிநீர்வசதி மற்றும் சுகாதார சீர்கேடுகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஏழுநாட்களாக பல ஆயிரக்கணக்கான மக்கள் வலிகாமம் வடக்கு மற்றும் மேற்குப்பகுதியில்நடைபெற்ற சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தங்கியுள்ளது தெரிந்ததே.

இவர்களுக்கான உணவு மற்றும் உடைகளை சில அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்ற போதிலும் பெருந்தொகையானோர் மாற்றுடை இன்றியும், மலசல கூட வசதி மற்றும் குடிநீர் வசதிகள் போன்ற நாளாந்த அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாதநிலையில் உள்ளனர்.

ஆண்கள பெண்கள் அனைவருமே மலசலகூட வசதிக்காகவும் குடிநீர் பெறுவதற்காகவும் ஒரு மைல் தூரம்வரை செல்ல வேண்டியுள்ளது.

அந்தோனியார் ஆலயமும் முன்பாகவுள்ள திறந்த வெளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீன் பிடிக்கச் சென்ற இரு தமிழரை காணவில்லை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்புக்கு அருகேயுள்ள புதுக்குடியிருப்புக் கிராமத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை மாலை கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றவர்களில் இரு தமிழர்கள் கரை திரும்பவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், காணாமல் போனோரில் ஒருவர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சோமசுந்தரம் (வயது 37) என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[4ஆம் பக்கம் பார்க்க]

### நல்லூர் தேர் உற்சவம்

# மதில் இடிந்து வீழ்ந்ததினால் 40க்கு மேற்பட்ட பக்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

நல்லைக் கந்தனின் இரதோற்சவத்தினை காண்பதற்குப் பழைய நாவலர் மண்டபத்தின் கிழக்கு மதிலின்மேல் பல பக்தர்கள் ஏறிநின்ற வேளை மதில் உடைந்து அங்கு குழுமி நின்ற பக்தர்கள்மேல் வீழ்ந்ததில் 40 மேற்பட்ட பக்தர்கள் படுகாயமடைந்தனர். பலர் சனநெரிசலில் சிக்குண்டு தத்தளித்தனர்.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் நல்லைக் கந்தனின் இரதோற்சவத்தினைக் கண்டு களிக்கப் பெருந்திரளான மக்கள் குழுமிநின்ற வேளை முருகப் பெருமான் பிரதான வாயில் வழியாகத் தேரில் உலாவரச் செல்லும் பொழுது இச்சம்பவம் நடைபெற்றது.

இவர்களில் 13 பேர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். 17 பேர் நல்லூரில் இயங்கிவரும் தீவக இடம் பெயர்ந்தோர் வைத்தியசாலையிலும் ஏனையோர் முதலுதவிச்சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சைபெற்றனர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோர் விபரம்:

சிவசோபனா (வயது 10) இராசவீதி நல்லூர், பாலசுந்தரம் (37 வயது) யாழ்ப்பாணம், எஸ். பாஸ்கரன் (45 வயது) யாழ்ப்பாணம், நகுலேஸ்வரி (40வயது) யாழ்ப்பாணம், எம் கரிதாஸ் (13 வயது) யாழ்ப்பாணம், பி. காந்தரூபன் (22 வயது) ஆனைக்கோட்டை, ரி. இலங்கோவன் (19 வயது) உருபராய், யி. பத்மலோஜினி (33 வயது) பலாலி வீதி கந்தர் மடம், ஏ. முருகையா (47 வயது) கொக்குவில், யோ. கிமாலன் (8வயது) 3-ம்கட்டை நல்லூர், வி. சிவபாதம் (40 வயது) மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம், ஜெயந்தி (14 வயது) பழம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். திருமதி நடேசபிள்ளை (47 வயது) சாவகச்

[4ஆம் பக்கம் பார்க்க]

## நல்லூர் தேர் உற்சவத்தில் இலட்சக்கணக்கில் பக்தர்கள்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று மிக கோலாகலமாக இடம்பெற்றது. இதுகாலவரை இல்லாத அளவுக்கு பல இலட்சக்கணக்கான பக்தர்கள் இவ் உற்சவத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது காலை ஏழு முப்பது மணியளவில் அலங்கரிக்கப்பட்ட தேரின் மீது எழுந்தருளிய நல்லூர்க்கந்தன் பக்தர்களின் அரோகரா கோஷத்திற்கும், பஜனைப் பாடல்களுக்கும் மத்தியில் வீதி வலமாக வந்து சுமார் ஒன்பது மணியளவில் தமது இருப்பிடம் திரும்பினார்

வழமையாக நடைபெறும் தேர் அர்ச்சனை நேற்று ரத்துச் செய்யப்பட்டிருந்தது. சுவாமி இருப்பிடம் வந்ததும் உடனடியாக பச்சை உடுத்தி வசந்த மண்டபத்திற்கு சென்றமர்ந்தார்.

இன்று தீர்த்த உற்சவமும், நாளை பூங்காவனமும் இடம் பெறுவதுடன் நல்லூர் கந்தன் வருடாந்த உற்சவம் நிறை வெய்தும்.

### முஸ்லிம் காங்கிரசின்

## முஸ்லிம் பிரதேச சபை சாத்தியமானதல்ல

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திற்கு வெளியே வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிறகு வடக்கு கிழக்கு மாகாண பிராந்திய சபை பூரண உத்தரவாதம் வழங்கும். ஆனால் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள முஸ்லிம் பிரதேச சபைகளை உத்தேச முஸ்லிம் சபையுடன் இணைப்பது சாத்தியமல்ல அது நிருவாக நடைமுறைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விமான நடமாட்டம் அதிகரிப்பு

(நமது நிருபர்)

பலாலிவிமானத் தளத்திற்கு நேற்று விமானங்கள் பல தடவை வந்துசென்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது

அத்துடன் பலாலி விமானத் தளத்திலிருந்து உலங்கு வானூர்திகள் தீவுப்பகுதிக்கு பலதடவைகள் சென்று திரும்பின.

## சினைப்பர் தாக்குதலில் இருவர் படுகாயம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் படுகாயமடைந்தனர்

நேற்றுக் காலை 8-30 மணியளவில் தனது வயலைப் பார்வையிடச் சென்றபோது இராணுவம் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் சில்லாலையைச் சேர்ந்தமரியநாயகம் (வயது54) என்பவர் காலில் படுகாயமடைந்தார் காலை 10-30 மணியளவில் தமது வீட்டை பார்வையிடச் சென்றபோது இராணுவம்

[4 ஆம் பக்கம பார்க்க]

## முஸ்லிம்களின் உடலில் அரேபிய இரத்தமேஓடுகிறது

நாங்கள் அரேபியர்கள் எங்கள் உடலில் அரேபிய இரத்தமே ஓடுகின்றது சோனகர் என்றாலே அரேபியர்கள் என்று தான் அகராதியில் இருக்கிறது என்று முஸ்லிம்களின் தனித்துவத்தை எடுத்துக்காட்டி விழிப்புணர்ச்சிக்கு வழிகாட்டியவர் சேர் ராசிக் பரீக் ஆவார். அஷ்ரப்

மேற்கண்டவாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம் எச், எம். அஷ்ரப், சேர் ராசிக் பரீத் நினைவு தினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

## கலைப்பீட மாணவருக்கு பரிசில்கள் வழங்கப்படும்

(நமது நிருபர்)

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களில் பாடரீதியாக அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு இன்று பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

கலைப்பீடத்தின் முதலாம், இரண்டாம், மூன்றாம் நான்காம் வருட மாணவர்ளுக்கு 1990 ஆம் ஆண்டுப் பரீட்சையில் பாடரீதியாக இப்பரிசில்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பாடத்திலும் அதிகூடிய புள்ளியைப் பெற்ற மாணவருக்கு பரிசில் வழங்கப்படும்.

கலைப்பீடசபைக் கூட்டத்தில் வைத்து வழங்கப்படவுள்ள இப்பரிசில்களை மாணவர்கள் தவறாது பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு பரிசில்கள் வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

## குமார் பொன்னம்பலம் மீது பிரேமதாசா சாடல்

இன்று நாட்டில் சிங்களத்தைச் சரியாகப் பேசக்கூடமுடியாத சிலர் தாம் சிங்கள மக்களுக்காகத் தமது உயிரைக்கூட அர்ப்பணிக்க ஆயத்தமாக உள்ளதாக அறிக்கை விடுகின்றனர்.

இவ்வாறே தமிழ் மொழியைச் சரிவரப் பேச முடியாத சிலர் தாம் தமிழ் இனத்திற்காக தமது உயிரையே அர்ப்பணிக்கத் தயாராக உள்ளதாக ஆங்கிலத்தில் அறிக்கை விடுகின்றார்கள்.

இவ்வாறுஜனாதிபதி பிரேம

(4 ஆம் பக்கம் பார்க்க).

# வரி விளம்பரம்

## முருகன் தமிழ் அர்ச்சனை மலர்

தேர்த் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் கோவில் வாசலில் அமைந்திருக்கும் அண்ணா தொழிலகத்தாரின் விளம்பர நிலையத்தில் அண்ணா உற்பத்திப் பொருள்களை வாங்கி முருகன் அர்ச்சனை மலரை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். (3085)

## விற்பனைக்கு

இருபாலாருக்குமுரிய *Seiko, Citizen* ஓட்டோமற்றிக்; *Casio-Solar* விற்பனைக்குண்டு. கடிகாரங்கள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப் பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். (3079)

## 'நிழல்கள்' சிறுகதைத் தொகுப்பு

''அக்கினியில் கருகும் ஆத்மாக்கள்'' மூலம் முதற் பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட செல்வி சந்திரா தியாகராசா (திருமதி சந்திரா இரவீந்திரன்) வின் பரிசுபெற்ற சிறுகதைகள், குறுநாவல் அடங்கிய ''நிழல்கள்'' பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், உதயன் புத்தகசாலை பருத்தித்துறை ஆகிய இடங்களில் விற்பனையாகின்றது. (3071)

## புத்தகக்கண்காட்சியில்

ஐந்து மீரா பிரசுரங்களை வாங்குபவர்களுக்கு 50 ரூபா பெறுமதியான ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' என்னும் புதிய நாவல் அன்பளிப்பாக வழங்கப்படுகிறதுஸ்ரீகாந் புத்தகசாலைநல்லூர் கோயில் முன்புறம் நல்லூர். (சி/4908)

# தபாலகம் இடமாற்றம்

[சங்கானை]

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமையால் பண்டத்தரிப்பில் இயங்கி வந்த தபால் அலுவலகம் தற்காலிகமாக சங்கானை தபால் அலுவலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தமக்குரிய தபால்களை சங்கானை தபா...

# சமய அறிவுப் போட்டி; பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு யாழ். மாநகரசபையினால் நடாத்தப்பட்ட சைவசமய அறிவுப் போட்டிபண்ணிசைப்போட்டி, சமயபேச்சுப்போட்டிகளில்பங்குபற்றிவெற்றி பெற்றவர்களுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இடம் பெறும் பரிசளிப்பு விழாவில் பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.

பண்ணிசைப் போட்டியின் 3 பிரிவுகளிலும் வெற்றிபெற்றுக் கொண்டோரின் பெயர் விபரம் வருமாறு:

கீழ்ப்பிரிவு: 1 ஆம் இடம் இ. பிரியதர்சினி (யாழ். கனகரத்தினம் ம. ம. வி.) 2 ஆம் இடம் கு. தீபா (யாழ் சீனன் கலட்டி ஞானோதய வித்தியாசாலை) 3 ஆம் இடம் ஸ்ரீ. தாட்சாயினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி):

மத்தியபிரிவு:

1 ஆம் இடம் சி.சிவரதி (யாழ். மகாஜனக் கல்லூரி) 2 ஆம் இடம் சோ. நளாயினி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) 3 ஆம் இடம் த. கீதாதேவி (யாழ். அத்தியார் இந்துக் கல்லூரி)

மேற்பிரிவு:

1ஆம்இடம்மு சாந்தசொரூபி (யாழ். இராமநாதன் நுண்கலைக்கழகம்) 2 ஆம் இடம் சி. பகீரதன் (யாழ்.மகாஜனக் கல்லூரி) 3 ஆம் இடம் இ. விமலாம்பிகை (மானிப்பாய்)

## 42 லட்சம் ரூபா நோர்வே உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு சுமார் 42 லட்சம் ரூபா நோர்வே செஞ்சிலுவைச் சங்க உதவித் திட்டத்தின் கீழ் கிடைக்க உள்ளது. இதற்கான அனுமதி ஏற்கனவே கிடைத்துள்ளது இவ்

உதவி இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையூடாக வழங்கப்பட உள்ளது. (க)

# பொருள்களை ஏற்றி வந்த உழவு இயந்திரங்கள் தடுப்பு

வடபகுதிக்கு அத்தியாவசிய பொருள்களை ஏற்றிச் செல்லவிருந்த சுமார் நூறு உழவு இயந்திரங்களை வவுனியாவில் இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளனர்.

வவுனியாவுக்கு வந்த இந்த உழவு இயந்திரங்களில் அங்கிருந்து திரும்பும்போது அத்தியாவசியப் பொருள்களோடு தடைசெய்யப்பட்ட பொருள்களையும் ஏற்றிவந்ததாக இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

## இருவர் கைது

'அத்த' பத்திரிகையின் கேலிச் சித்திரக்காரரான மைக்கோ யூனூஸின் இந்த மாதம் 18 ஆம் திகதியன்று அவரது மாடி வீட்டுக்கு முன்பாக வைத்துத் தாக்கியதாகச் சொல்லப்படும் இரண்டாவது சந்தேக நபர் கடந்த சனியன்று பொரளைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# குரக்கன் பயிர்ச்செய்கை நவாலியில் வெற்றியளித்தது

(மானிப்பாய்)

நவாலியில் குரக்கன் பயிர்ச்செய்கை சிறந்த வெற்றியளித்துள்ளது. மேற்படி குரக்கன் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்காக கமக்குழுவினால் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இலவசமாக குரக்கனும் 35 லீற்றர் மண்ணெண்ணையும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

விவசாயிகள் தாம் பெற்ற வருமானத்தில் சொற்பஅளவு தொகையை கமக்குழுவுக்கு மீள அளிக்கப்படல் வேண்டும். இத்திட்டம் எதிர்வரும் ஆண்டுகளிலும் கடைப்பிடிக்கப்படும் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (07)

## 5 குளங்கள் புனரமைப்பு

(வடமராட்சி)

கப்புதூ கிராமசேவை அலுவலர் பிரிவில் ஐந்து குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

இதில் கப்புதூ கிராமத்தில் ஆலடிக் குளமும், அந்தணந்...

## வவுனியாவில் கல்வியியல்

...

# அமெ. நடமாடும் ஆஸ்பத்திரி கொழும்பில் செயற்படும்

(கொழும்பு)

சிறந்த கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள், நவீன வைத்திய உபகரணங்கள் மருந்து வகைகளைக் கொண்ட 'ஓர்பிஸ்' என்று அழைக்கப்படும் அமெரிக்க விமானத்திலுள்ள கண் ஆஸ்பத்திரி எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பு வருவதாகக் கொழும்பு கண் ஆஸ்பத்திரி பணிப்பாளர் டாக்டர் உபாலி மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

சிக்கலான கண் நோய்களை உடையோர் இவ் அமெரிக்க கண் சிகிச்சை நிபுணர்களிடம் சிகிச்சை பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக இத்திட்டங்களை ஒழுங்கு செய்யும் பொருட்டு 'ஓர்பிஸ்' கண்ணாஸ்பத்திரியை சேர்ந்த டாக்டர் ஒருவர் இவ்வாரம் கொழும்பு வருகிறார்.

1982 ஆம் ஆண்டில் 'ஓர்பிஸ்' கண்ணாஸ்பத்திரி இலங்கை வந்தபோது சிக்கலான கண் நோயுடைய சுமார் 500க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர் என டாக்டர் உபாலி மென்டிஸ் மேலும் தெரிவித்தார்.

இந்த அமெரிக்க டாக்டர்களின் விஜயத்தினால் இலங்கையிலுள்ள டாக்டர்களும் நன்மை பெறுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

# 45-ம் நாள் நினைவஞ்சலி



| தாயக மண்ணிற்காய் | தமிழீழ விடிவிற்காய் |
|---|---|
| 01 | 14 |
| 02 | 07 |
| 1970 | 1992 |

## 2-ம் லெப். கதிரவன்

[குணசேகரம்-நகுலேந்திரன் (கீத்)]

அரியாலை ஈன்றெடுத்த அற்புதத் திலகங்களாம்
குணசேகரம் அன்னம்மா தம்பதிகள்
இவர்களின் இன்பத்தில் அவதரித்த
இளையனவன் கதிரவனாம்
நகுலேந்திரன் என்னும் நாமம் படைத்தவன்
நற்குணம் கொண்ட கதிரவனாம்
நமதீழ மண்ணிற்காய் உயிர்நீத்த வேங்கையவன்
வீரனிவன் ஆத்துமா சாந்தியடைய வேண்டுகிறோம்.

அரியாலை கிழக்கு,
அரியாலை.

-- குடும்பத்தினர்
(3078)

# ஓராண்டு நினைவஞ்சலி



# 1ம்-ஆண்டுநினைவஞ்சலியும் திவச அழைப்பிதழும்



மணலாற்றில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்த வீரவேங்கை

## 2ஆம் லெப்டினன்ட் சலூஜா

**(கணபதிப்பிள்ளை ரதீஸ்வரி)**

| தாயின் மகிழ்விற்காய் | தாயக விடிவிற்காய் |
|---|---|
| 30- 04- 1971 | 08- 09- 1991 |

திதி - 27. 08. 1992

அன்னாரின் திவச நிகழ்ச்சியில் பங்கு கொள்ளுமாறு நண்பர்கள் அன்பர்கள் சக போராளிகளையும் உற்றார் உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அண்ணாசிலையடி,
கரணவாய் தெற்கு

(3077)

கணபதிப்பிள்ளை
குடும்பத்தினர்

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



| அவதரிப்பு | அர்ப்பணிப்பு |
|---|---|
| 27-3-71 | 27-8-90 |

## 2-ம்லெப்டினன்ட்எலிசபெத்

**(சிறீஸ்கந்தராசா ஸ்ரீறஞ்ஜனி)**

சென்ற 27-8-90 அன்று பலாலி - கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

செந்தமிழின் விடிவிற்காய் செங்குருதி கொட்டி
செந்தணலிலும் எரிவோம்
பொங்கும் புலியணியில் பங்கெடுத்து பாடையிலும்
சாய்வோம்
எங்களினம் ஒன்றிணைவோம் எதிர்க்கும் சிங்களத்தின்
சிரசறுப்போம்
வங்கக் கடல் இணைந்த தங்கத்தமிழிழ மெங்கும்
எங்கள் புலிக்கொடி பறிப்போம் !!

வடமராட்சி கிழக்கு
வேம்படி.

உன் பிரிவால் துயரும்
அப்பா அம்மா சகோதரர்

ளது.

பொதுமக்கள் தமக்குரிய தபால்களை சங்கானை தபாலகத்தில் காலை 9 மணிமுதல் மாலை 3 மணி வரை நேரில் பெற்றுக்கொள்ளலாம் என தபாலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன- (ச)

## ஊழியர்களுக்கு பணிப்புரை

இராணுவ நடவடிக்கை காரணமாக இயங்க முடியாத நிலையிலுள்ள பண்டத்தரிப்பு (காடாப்புலம்) அரசினர் கிராமிய வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களை தற்காலிகமாக மானிப்பாயில் செயற்பட்டுவரும் தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலையில் கடமையாற்றுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிப்புரை வழங்கியுள்ளார். பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, பெரியவிளான், வடலியடைப்பு ஆகிய இடங்களை சேர்ந்த பெரும்பாலான மக்கள் தற்போது இடம்பெயர்ந்து மானிப்பாய் பகுதியிலுள்ள அகதி முகாம்களிலும், தனியார் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

வருகின்றனர்.

இதில் கப்புதூ சிராமத்தில் ஆலடிக் குளமும், அந்தணந்திடல் கிராமத்தில் இலகடிக் குளமும், கரம்பன் கிராமத்தில் கரம்பன் குளம் ஆகிய மூன்று குளங்களை போரூட் நிறுவனமும்,

மற்றும் ஞானியாதிக்குளம், கூழாவாடிக்குளம் ஆகிய இரு குளங்கள் சிரமதானப் பணியிலும் புனரமைப்புச் செய்யப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது. (82)

## கசிப்பு பிடிபட்டது

(சுன்னாகம்)

சுன்னாகம் காவல் துறையினர், உரும்பராய் சிவகுல வீதியில் உள்ள கசிப்பு உற்பத்திச் சாலையை கடந்த ஞாயிறு காலை 6.00 மணியளவில் சுற்றி வளைத்துப் பிடித்தனர். இதன் போது குணவர்த்தன கலா, ஜெயரட்ணம் ஜெயமதி, மார்க்கண்டு நாகம்மா, குணரட்ணம் மஞ்சுளா ஆகிய நாலு பெண்கள் பிடிபட்டனர். கசிப்பு உற்பத்திக்குப் பயன்பட்ட பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

(09, 11)

## வவுனியாவில் கல்வியியல் கல்லூரி

வவுனியாவில் வெகு விரைவில் ஒரு கல்வியியல் கல்லூரி அமைக்கப்படவுள்ளதாக கல்வி ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது

இதற்கான வேலைகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றது என்றும், இதன் மூலம் வட பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பட்டமளிப்பு

(குருநகர்)

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் திருமுறைச் சொல்வள்ளல் என்னும் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

கடந்த 12-8-92 தொடக்கம் 23-8-92 வரையான 12 தினங்களும் அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் சிறி நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் திருமுறைச்சொற்பெருக்காற்றியமைக்காக ஆலயப் பரிபாலகர் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவரால் மேற்படிபட்டமளித்துக்கௌரவிக்கப்பட்டார்.

திருவிழா உபயகாரரான யோகாஸ் ப. பத்மகுமார் சிவ. மகாலிங்கத்திற்கு பொன்னாடை அணிவித்தார். (21)

## கிணற்றில் வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தவறி வீழ்ந்த இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக மரணத்தைத் தழுவிக் கொண்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மாலை நல்லூர்ப்பகுதியில் நடந்தது.

இச்சம்பவம்பற்றி தெரிய வருவதாவது: நல்லூர் ஆலய கிழக்குப்புறமாக உள்ளகிணற்றுக்கட்டில் இருந்தபோதே விக்னேஸ்வரராசா (வயது 26) என்பவர் தவறி வீழ்ந்துள்ளார். சம்பவம் நடைபெற்ற முப்பது நிமிடங்களின் பின்பே சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது. (ச)

## எரிபொருளில் கலப்படம் கப்பல் தடுத்து வைப்பு

(கொழும்பு)

கொலன்னாவையிலுள்ள எரிபொருள் சேமிப்பு தாங்கிகளுக்கு கலக்கப்பட்ட பெற்றோல், டீசலை நிரப்பிய டேனிஸ் எண்ணைக் கப்பலான எம். வி. பல்மா மீது இலங்கைப் பெற்றோலியகூட்டுத் தாபனம் 40 இலட்சம் அமெரிக்கடொலர்களைநஷ்டஈடாகக் கோரியுள்ளது.

சிங்கப்பூரிலுள்ள எண்ணை விநியோகிப்பவரினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட இந்த எண்ணைக் கப்பலிலிருந்து கொலன்னாவையிலுள்ள எரிபொருள் சேமிப்பு தாங்கிகளுக்கு கலக்கப்பட்ட பெற்றோல் டீசலை நிரப்பியது. இதன் விளைவாக ஏற்கனவே தாங்கிகளுக்குள் இருந்த எரிபொருள்கள் கலக்கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து சேமிப்பு தாங்கிகளுக்கு எரிபொருள்கள் நிரப்பப்படுவதுஉடன் நிறுத்தப்பட்டது என்று இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார்

கப்பலை விடுவிப்பதற்கு முன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 40 இலட்சம் அமெரிக்க டொலர்களை நஷ்டஈடாகக் கோரியுள்ளது.



## கப்டன் அக்கினோ

( செல்வி கலைவாணி இராசரத்தினம் )

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 26-07-1968 | 08-09-1991 |

திதி: 27 - 08 - 1992

தமிழீழம் அமைக்க என்று தமிழருறும் துயரம்கண்டு
அமிழ்தூறும் உயர்கலைகற்கா தடியோடு தகர்த்துவிட்டு
உமிபோலும் தாய்ப்பாசம் என்றோ உயிர்ப்பாசம்
உதறிவிட்டு
எமைநீங்கி இதயம்பொங்க எழுந்தடைந்தாய் கலைவாணி நீ

வீரமிகு களம்பல கண்டாய் வீராங்கனை அக்கினோவே
மாரகனும் மறுகிடும்மாபெரும் மணலாற்றுப் போரில்
நின்றே
தீரமுடன் மண்மீட்குந்தாகத் திறமையுடன் புரிந்தபோரிலே
வீரசுவர்க்கங் கண்டாய் எங்கள்வேதனைக் கெல்லையின்றே

ஆண்டொன்றகன்றும் துக்கம்அகலாது வதைத்தல் காண்நீ
மாண்டவுன் மாவீரம் மக்கள்மனமெலாம் உருக்கல் காண்நீ
நீண்டவுன் நினைவெலாம் நெஞ்சினை அடைத்தல்காண் நீ
வேண்டுதும்நீ ஈசனடிசேர விளம்புதும் கண்ணீரஞ்சலியே

27-08-1992 வியாழக்கிழமை (இன்று) எமது இல்லத்தில் நடைபெறும் முதலாவது ஆண்டு நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

'' கலா பவனம் '' — குடும்பத்தினர்
கைதடி - நுணாவில்.
சாவகச்சேரி.

( 3088 )

எங்கள் புலிக்கொடி பறிப்போம் !!

வடமராட்சி கிழக்கு
வேம்படி,
தாளையடி,

(3083)

உன் பிரிவால் துயரும்
அப்பா அம்மா சகோதரர்

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 08 - 27

1989ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் - பேசாலைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

ஏழாலையில், தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1990ஆம் ஆண்டு கட்டுவன் பகுதியில் பலாலி முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**மேஜர் அன்பு/செல்வராஜா மாஸ்ரர்** (சின்னத்துரை செல்வராசா - பிரதான வீதி, காங்கேசன்துறை)

**2-ம் லெப். எலிசபெத்** (சிறிரஞ்சனி சிறிஸ்கந்தராசா - உடுத்துறை வடக்கு, தாளையடி)

அல்லைப்பிட்டியில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய

**சாம்சன்** (செல்லப்பா குலேந்திரன் - நாவாந்துறை, யாழ்.)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது செங்கலடிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட கூலித்தொழிலாளி, மாவடி வேம்புப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட மற்றுமொருவர் ஆகிய 2- தமிழர்கள்.

ஊர்காவற்றுறையிலிருந்து, மண்டைதீவை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேறிய நாளிலிருந்து இதே தினம் வரை இப்பகுதியிலும், மண்கும்பான், அல்லைப்பிட்டி மற்றும், இதர தீவகப்பகுதிகளிலும் அவர்களினால் படுகொலை செய்யப்பட்ட 72 - க்கும் மேற்பட்ட தமிழர்கள் - இதே சம்பவத்தின் போது மண்டைதீவில் வைதது சிறிலங்காஇராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டு முகமூடி நபரின் தலையாட்டலின் காரணமாக தேசவிரோத சக்திகளினால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர், அல்லைப்பிட்டியிலுள்ள வீடொன்றினுள் இருந்து கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட மண்கும்பான் 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொது மகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4946)

### சிந்தனைக்கு

மனித சகோதரத்துவம் உபதேசம் செய்வதனால் அல்ல, அதைப் பின்பற்றுவதன் மூலமே போதிக்க முடியும்.

— அன்த்வான் தெ ஸெயின்ட் எக்ஸுபெலி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-08-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## 'அடிமை'யின் பிரச்சினை

உள்நாட்டுப் போரினாலும், வரட்சியினாலும் பட்டினியின் கோரப்பிடியில் சிக்கி 15 லட்சம் சோமாலிய மக்கள் செத்து மடியும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. நாளாந்தம் 200 மேற்பட்ட குழந்தைகள் மரணமடைந்து கொண்டிருப்பதாக, நிவாரண வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்கள் தெரிவிக்கின்றார்கள். இதேவேளை, ஐந்து வயதிற்கு உட்பட்ட சிறுவர்களில் நான்கில் ஒரு பங்கினர் இறந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முன்னாள் யூக்கோசெலவோக்கியாவின் ஒரு பகுதியான பொஸ்னியா - ஹெர்ஸகோவினாப் பகுதியில் சேபியர்களின் முற்றுகையில் சுமார் மூன்று மாதங்களாகச் சிக்கியுள்ள மக்களும் உணவு, சுகாதார வசதிகள் இன்றி அல்லல்படுவதாகவும் தெரியவருகிறது.

இவ் இரு விடயங்களிலும் அப்பாவிப் பொது மக்கள் பட்டினிக் கொடுமையை எதிர்நோக்கியுள்ள அவல நிலையில் உள்ளனர். ஆனால் கறுப்பர்களைக்கொண்ட ஆபிரிக்க சோமாலியாவின் நிலைபரத்தை விட ஒப்பீட்டு ரீதியில் ஐரோப்பிய பொஸ்னியா - ஹெர்ஸகோவினா நிலைபரம் சற்று மேம்பட்டதொன்று என்றே சொல்லலாம். ஏனெனில் பொஸ்னியா - ஹெர்ஸகோவினாவில்மக்கள் போரினாலும், சேபியர்களின் சித்திரவதை முகாம்களிலும் கொல்லப்படுவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளனவே ஒழிய பட்டினியால் முதியவர்களோ குழந்தைகளோ இதுவரை இறந்ததாக செய்திகள் இடம்பெறவில்லை. ஆனால் சோமாலியா பற்றி வரும் செய்திகள் கோரமானவை. பட்டினியின் கொடுமையால் இறந்து விழும் கறுப்பினக் குழந்தைகளையும், அவர்களை ஏற்றிச் செல்லும் சர்வதேச நிவாரண அமைப்பு வாகனங்களையும் உலகச் செய்தி ஸ்தாபனங்கள் தமது ஒளிபரப்பில் காட்டுகின்றன. அத்தோடு, சோமாலியாவில் நடமாடும் "எலும்புக் கூடு"களையும் இவை காட்டுகின்றன.

ஆனால் இன்று பொஸ்னியா - ஹெர்ஸகோவினா விவகாரத்தில் மேற்குலகின் கவனம் சென்றுள்ளதுபோல் சோமாலியாவின் பக்கம் கவனம் திரும்பவில்லை. பொஸ்னியா - ஹெர்ஸகோவினா நகர்களில் சேபியர்களின் முற்றுகைகளுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்பதிலும், அவர்களுக்கு நிவாரணப் பொருள் வி நியோகம் செய்வதிலும்

# சோமாலியாவில் பட்டினி கோரத் தாண்டவம்; சிறுவர்களில் கால்பங்கினர் மடிந்துவிட்டனர்

சோமாலியாவில் ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் சுமார் கால் பங்கினர் பட்டினிக் கொடுமையால் உயிரிழந்து விட்டனர். அங்கு நாளாந்தம் சுமார் இருநூறு குழந்தைகள் வரை செத்து மடிவதாகச் செய்திகள் கூறுகின்றன. பதினைந்து லட்சம் மக்கள் பட்டினிக் கொடுமைக்கு இலக்காகி உயிரிழக்க நேரலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

ஆபிரிக்காவின் மிகவும் வறுமை மிக்க, பின் தங்கிய நாடாக கருதப்படும் சோமாலியா இந்தியாவின் மிகப் பெரிய மாநிலமான ராஜஸ்தானைப் போல இருமடங்கு நிலப்பரப்பைக் கொண்டது. தென் ஆபிரிக்காவுக்கு அடுந்ததாக நீண்ட கடற்கரையை கொண்ட சோமாலியாவில் சுமார் எண்பது லட்சம் மக்கள் வாழ்கிறார்கள் இந்நாட்டில் இன்று ஏறத்தாழ மூன்றிலிரண்டு பங்கு மக்கள் பட்டினிக் கொடுமைக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

சோமாலியாவில் பல இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிவரை அரபுக்களும் பேர்சியர்களும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சோமாலியா பிரதான மையமாக இருந்தது. 1941 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிரிட்டன் சோமாலியாவை ஆட்சி செய்தது. ஆனால் 1960 முதல் பிரிட்டனும் சோமாலியாவிற்குச் சுதந்திரம் வழங்கியிருந்தது.

1969-ம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஜனாதிபதி மொகமட் சியாட் பாரே போராளிகளின் மிரட்டல்களால் ஏழு மாதங்களுக்கு முன்னர் நாட்டை விட்டுத் தப்பியோடினார். ஜனாதிபதி பாரே நாட்டை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போட்டிக் குழுக்களின் மோதல்கள் இடம்பெறலாயிற்று. இதில் அலி மஹதி தலைமையிலான குழுவும், ஜெனரல் அட் தலைமையிலான குழுவும் பிரதான பாத்திரத்தை வகிக்கின்றன. இப்போது சோமாலியாவில் சட்டம், ஒழுங்கு என்பன அறவே கிடையாத நிலையே காணப்படுகின்றது.

இதனால் யுத்தம் நிறைந்த சோமாலியாவுக்குள் பிரவேசிப்பது ஆபத்தான காரியமென்ற அச்சமும் தலை தூக்கியுள்ளது. நிவாரண உதவிகளுடன் வரும் கப்பல்கள் கூட போராளிகளின் தாக்குதல்களில் சிக்க நேரிட்டு விடுகிறது. இதனால் தலைநகர் மொகதீரிலிருந்து சுமார் 48 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள தனிப்பட்ட விமான நிலையத்தையே ஐ நா. அதன் தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டியதாகியுள்ளது.

பட்டினிச் சாவும், சிவில் யுத்தமும் பயங்கரமாக உருவெடுத்திருக்கும் சோமாலியாவில் ஆகக்குறைந்தது ஐந்நூறு படைவீரர்களாவது இங்கு தங்கியிருந்து நீண்டகால நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டுமென ஐ. நா. பாதுகாப்புச்சபை அனுப்ப வேண்டுமென்ற ஆலோசனை கடந்த ஜூலையில் முன்வைக்கப்பட்டது. ஆனாலும் அங்கு நடந்து வரும் போராட்டமும், யூகோஸ்லாவியாவில் இடம் பெறும் சண்டைகளால் மேற்குலகின் கவனம் திசை திரும்பி இருப்பதும் மேற்கண்ட ஆலோசனையை நடைமுறைச் சாத்தியமாக்கவில்லை.

சோமாலியாவின் பொருளாதாரத்தில் கால்நடை வளர்ப்பு முதலிடம் வகிக்கின்றது. எழுபது சதவீத மக்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு அதன் மூலம் தொண்ணூறு சதவீத அந்நியச் செலாவணியை தேடிக் கொண்டு வாழ்ந்து வந்தனர். ஆனால் இன்றோ நிலைமை மோசமாகவுள்ளது. சிறுவர்கள் சின்னம்மை, குக்கல் போன்ற நோய்களாலும் நுரையீரல் கோளாறுகளாலும் அவதியுறுகின்றனர். அங்கு பணியாற்றும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்றார். சோமாலியாவின் வடக்கிலும், தெற்கிலும் சமையல்கள் பாரிய அளவில் நடத்தப்படுகின்றன. வடக்கில் நூறு நிலையங்களிலும், தெற்கில் நூற்றியம்பது நிலையங்களிலும் சமையல் நடைபெறுகின்றன. அநேகமாக எல்லோருமே நோய் வாய்ப்பட்டுக் காணப்படுவதால் இந்நிலையங்களில் சமைக்கப்படும் உணவைத்தானும் சாப்பிடக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை.

''யுனிமிக்ஸ்'' எனப்படும் உயர்ந்த புரதச்சத்து நிறைந்த இலகுவாக மெல்லக் கூடிய உணவு வகைகள் இங்கு கிடைக்கச் செய்யவேண்டியது அவசியம். யுனிமிக்ஸ் சிறுவர்களுக்கு ஒரு நாளைக்கு ஐந்து தடவைகள் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் சோமாலியாவில் இது இரண்டு தடவையாவது ஊட்டக் கிடைக்குமெனின் அது சிறுவர்களின் அதிர்ஷ்டமாகவே இருக்கும். குழந்தைகளுக்கு சத்துமிக்க உணவுகளை ஊட்டும் பணிகள் உடனடியாக நடைபெற வேண்டும் என்கிறார். ஐ.நா. சிறுவர் நிதிய அதிகாரி இயன் மக்லியொட் சோமாலியாவில் தற்போது 135 நிவாரண நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன.

சோமாலியாவில் சுமார் முப்பதாயிரம் பேர் வரை செத்து மடிந்துள்ளனர். பத்து இலட்சத்துக்கு அதிகமான சோமாலியர்கள் இப்போது அகதிகளாகியுள்ளனர். சோமாலியாவில் இருந்து வெளியேறிய மக்கள் ஏமன், கென்யா ஆகிய நாடுகளுக்கு படகுகள் மூலம் சென்றடைந்தனர். இன்னும் பலர் எதியோப்பியா டிஜிபோட்டி, வட, கிழக்கு கென்யா ஆகிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

தலைநகருக்கு உணவுவகைகளைக் கொண்டுசெல்வதே பட்டினிச் சாவைத் தடுக்க ஒரே வழி என ஐ நா. கருதுகின்ற போதும் போராட்டக் குழுக்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வந்தால் மட்டுமே சோமாலியாவுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட முடியும் ஆனால் பிரதான குழுக்களோடு நடத்தப்பட்ட பேச்சுக்கள்இன்னமும் வெற்றி அளிக்கவில்லை என்றே தெரியவருகிறது.

நன்றி : வீரகேசரி

## காஷ்மீரில் இடம் பிடிப்பதே பாக். - இந்திய அபிலாஷை

### காஷ்மீர் விடு. இயக். தலைவர் கண்டனம்

(இஸ்லாமாபாத்)

இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் மக்களின் தேவைகளைப் பொருட்படுத்தாமல் ஆட்சியில் இடம் பிடிப்பதே தமது அபிலாஷைகளாக கொண்டுள்ளன என்று ஜம்மு காஷ்மீர் விடுதலை இயக்கத் தலைவர் அமானுல்லா ஹ்கான் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரிகளை உள்ளடக்கிய சமாதான மாநாடு நடைபெறாது இந்தியாவும் பாகிஸ்தானும் முட்டுக்கட்டைகளை போட்டதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

கடந்த 24ஆம் 25ஆம் திகதி வரை நடைபெற இருந்த கூட்டம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் இக் கூட்டத்திற்கு பாகிஸ்தான் தடைவிதித்திருப்பதுடன் அத்

யில் ஜம்மு காஷ்மீர் விடுதலை இயக்கம் அதன் சுதந்திரதாகத்தை வெளியிட ஆரம்பித்து இதுவரை 8000 பேர் வரையில் இப்போராட்டத்தில் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே காணப்படும் யுத்த நிறுத்தஎல்லையை மீறி ஆர்ப்பாட்டம் நடாத்த முற்பட்டோரை பாகிஸ்தான் இவ்வருடத்திடையே இரு முறை தடுத்து நிறுத்தியது.

காஷ்மீர் இரு பகுதிகளில் இருந்தும் தலா 200 பிரமுகர்கள் ஜூலை முதலாம் திகதி முதல் 3 ஆம் திகதி வரை ஓரிடத்தில் சந்தித்து காஷ்மீர் பற்றி ஆராய்வதென விடுதலை இயக்கம் ஏற்பாடு செய்தது இச்சமாதான கூட்டம் நடக்கக்கூடாதெனபாகிஸ்

## பொஸ்னியாவில் அமைதியைஏற்படுத்த இராணுவநடவடிக்கைகள் எடுக்கலாம்

### - ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு அனுமதி

(நியூயோர்க்)

பொஸ்னியாவில் மீண்டும் அமைதியை ஏற்படுத்தச் செய்வதற்காக இராணுவ நடவடிக்கைகள் உட்பட வேறு பல முயற்சிகளையும் பயன் படுத்தலாம்எனஐ. நா. சபை ஐ நா. பாதுகாப்புச்சபைக்கு அனுமதி அளித்துள்ளது.

நேற்று முன்தினம் பொஸ்னியாவின் நிலைபரம் குறித்து ஆராய்வதற்காக கூட்டப்பட்ட ஐ நா. சபையின் கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது

பொஸ்னியாவில் அமைதியை ஏற்படுத்த இராணுவக் குறுக்கீட்டு நடவடிக்கைகள் உட்பட வேறுபலமுயற்சிகளையும் மேற்கொள்ளுமாறும் ஐ. நா. சபை பாதுகாப்புச் சபையிடம் கேட்டுள்ளது.

179 உறுப்பினர்கள்கொண்ட ஐ. நா. சபையில் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 136 வாக்குகள் இடப்பட்டன.

## காபூலில் மோதல்காரணமாக 2 வாரத்தில் 1800 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

காபூலில் இரு பிரிவுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக குறைந்தது 1800 பேர் வரையில் இரு வாரங்களுக்குள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பொருட்டு மனிதாபிமான அடிப்படையில் ஆப்கானிஸ்தானில் பணிபுரியும் ஐ. நா. ஏஜென்சி ஒரு கோடி டொலர் அவசர நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளது.

காபூலில் காணப்பட்ட 17

'கொர்பி'

திரும்பவில்லை. பொஸ்னியா - ஹெர்ஸகோவினா நகர்களில் சேபியர்களின் முற்றுகைகளுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்பதிலும், அவர்களுக்கு நிவாரணப் பொருள் விநியோகம் செய்வதிலும் காட்டும் அக்கறையை மேற்குலகம் சோமாலியா மீது காட்டவில்லை.

சோமாலியாவிற்குத் தற்பொழுது உணவுப் பொருள்களை அனுப்ப மேற்குலகம் தயாராகி வருகின்றதாயினும் அதில் பெரும் நாட்டம் காட்டுவதாக இல்லை. இதற்கு சோமாலியாவில் போரிடும் இனக்குழுக்களிடம் இருந்து நிவாரணப் பொருள்களையும், பணியாட்களையும் பாதுகாப்பதில் உள்ள சிரமமே காரணம் எனக் தெரிவிக்கப்படுகின்றது.

பொஸ்னியாவிலும் - ஹெர்ஸகோவினாவிலும் சமாதானத்தை நிலைநாட்டவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் என ஆயிரக்கணக்கான ஐ.நா.சபையின் படையினர் அனுப்பப்பட்டுள்ளனர். சிலவேளை இவர்களின் முகாம்கள் கூட குண்டுத் தாக்குதலுக்குஉள்ளாகின்றன. சரசிவோவிலுள்ள ஐ நா. படையின் தலைமைப் பணிமனை சேபியர்களின் எறிகணைவீச்சால் முற்றாகச் சேதமடைந்து விட்டது. அத்தோடு வெளிநாட்டுநிவாரணப்பணியாளர்கள், செஞ்சிலுவை அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையிலும், ஐ நா. வும், நிவாரண அமைப்புக்களும் அங்கிருந்து பின்வாங்கவில்லை.

ஆனால் சோமாலியாவில் நிவாரணப் பொருள்களைப் பாதுகாக்க 500 ஐ. நா. பாதுகாப்புப் படையினர் தேவை எனத் தெரிவிக்கப்பட்டபோதும் அங்கு இன்னமும் படைகள் அனுப்பப்படவில்லை. ஐ. நா.வும் மேற்குலகமும் பெரும் அக்கறை காட்டவில்லை! ஈராக் மீது தாக்குதல் செய்ய 5,00000 படையினரை அமெரிக்காவால் திரட்ட முடிந்தது. ஆனால் 500படையினரை சோமாலியாவிற்கு அனுப்பமுடியவில்லை, நிவாரணம் வழங்கிப் பாதுகாக்க முடியவில்லை. இதேவேளைமீண்டும்வளைகுடாவில் ஒரு போர் நடத்த லட்சக்கணக்கில் படைதிரட்ட அமெரிக்கா முயற்சிக்கின்றது.

அதாவது நிதர்சனநிலை இதுதான் ஐரோப்பாவில் அதாவது முன்னாள் யூக்கோ செலவோக்கியாவில் நடக்கும் பிரச்சினையை தனது உள்வீட்டுப் பிரச்சினையாக வெள்ளையர்களின் பிரச்சினையாக மேற்குலகம் கருதுகின்றது. ஆனால் ஆபிரிக்காவில் - சோமாலியாவில் நடக்கும் பட்டினிக்கொடுமையை ஓர் அடிமையின் பிரச்சினையாக கறுப்பனின் பிரச்சினையாக மேற்குலகம் கருதுகின்றது. ஆனால் ஐ. நா-வின் பார்வையும் இதே நோக்கில் இருப்பதுதான் இன்று கவலைக்குரிய விடயம்.

---

டம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் இக்கூட்டத்திற்கு பாகிஸ்தான் தடைவிதித்திருப்பதுடன் அத்தடை இன்னும் நீக்கப்படவில்லைஎனவும் தெரிவித்தார்.

இதேவேளை காஷ்மீர்பற்றி பேசுவதற்கு கூட்டப்படும் கூட்டத்தை சட்டவிரோதமான நடவடிக்கை என அறிவித்த இந்திய பிரதிநிதிகள் அதற்கு தடைவிதித்துள்ளதாகவும் அமானுல்லாஹ்கான் மேலும் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு முற்பகுதி பற்றி ஆராய்வதென விடுதலை இயக்கம் ஏற்பாடு செய்தது. இச்சமாதான கூட்டம்நடக்கக்கூடாதெனபாகிஸ்தான் தடைவிதித்ததால் இம்மாதம் 24 முதல் 26 வரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

தடை உத்தரவுகள் நீக்கப்படாததினால் காஷ்மீர் சமாதானக் கூட்டம் காலவரையறையின்றி இரண்டாம் முறையும் ஒத்தி வைக்கப்பட்டது என காஷ்மீர் விடுதலை இயக்கமுன்னணி தெரிவித்தது.

## காஷ்மீரில் தேர்தலை நடத்த மத்திய அரசு ஆவல்

**— ஜேக்கப்**

(டில்லி)

காஷ்மீரில் விரைவில் தேர்தல்களை நடத்த மத்திய அரசு ஆதரவாக இருப்பதாகவும், இதுதொடர்பான நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டிருப்பதாகவும் இந்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் கூறியுள்ளார்.

கேரளத்தில் கோட்டயம் பகுதியில் செய்தியாளரிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் காஷ்மீர் பிரச்சினை குறித்து பொதுக் கருத்து ஒன்றை எட்டும் முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் கூறினார்.

## இந்திய விசாவிற்கான காலம் கணிப்பதில் மாற்றம்

[டில்லி]

உல்லாசப் பயணிகளுக்கான விசா செல்லுபடியாகும் காலம் உல்லாசப் பயணி இந்தியாவை வந்து சேர்ந்த தினத்தில் இருந்து முப்பது நாட்களாக இருக்க வேண்டும் என இந்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

இதுவரை காலமும் இந்த செல்லுபடியாகும்காலம் விசா பெற்ற தினத்திலிருந்து 30 நாட்களாக இருந்தது. ஆயினும் வெளிநாட்டு உல்லாசப் பயணி ஒருவர் விசா பெற்ற தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள்இந்தியப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

## கருணாநிதி மீது விசாரணை; ஜனதாதளம் கண்டனம்

(பெங்களூர்)

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதிக்கு எதிராக தமிழக அரசு விசாரணைக் கமிஷன் அமைத்திருப்பதை ஜனதா தளத் தலைவர்களில் ஒருவரான ஜோர்ஜ் பெர்னான்டஸ் கண்டனம் செய்துள்ளார்.

பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் தூய பொது வாழ்வின் நோக்கத்தோடு இந்த விசாரணைக் கமிஷன் அமைக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

---

கப்பட்டது

பொஸ்னியாவில் அமை

---

## 'கொர்பி' ஸ்பெயின் பயணம்

(மட்றிட்)

முன்னாள் சோவியத் யூனியனின் ஜனாதிபதி மிகையில் கொர்பசேவும் அவரது மனைவியும் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஸ்பெயின் போய்ச் சேர்ந்துள்ளனர் எனத்தெரியவருகிறது.

எதிர்வரும் திங்கட்கிழமை ஸ்பெயினில் ''மனிதாபிமானத்தின்எதிர்காலம்'' என்ற தலைப்பிலான மாநாடொன்றை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

## பதினொரு பேர் கைது

(சென்னை)

நெல்லை கட்டப்பொம்மன் மாவட்டத்தில் பொலிஸாரின் தேடுதலின் பேரில் அனுமதியின்றி நாட்டு வெடிகுண்டுகள் தயாரித்ததாகப் பதினொரு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

26 நாட்டு வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் அறிக்கை கூறுகின்றது.

## கோலன்குன்றுகளில் இருந்து இஸ்ரேல் விலகிச் செல்லாது

**-- இர்ஷாத் ரபீன் அறிவிப்பு**

(டெல்அவிவ்)

கோலன் குன்றுப்பகுதிகளில் இருந்து இஸ்ரேல் விலகிச்செல்லாது என்றும் தொடர்ந்தும் அங்கேயே இருக்கும் என்றும் இஸ்ரேலியப் பிரதமர் இர்ஷாத் ரபீன் தெரிவித்துள்ளார்.

ஜெருசலேத்தில்நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போதே இர்ஷாத்ரபீன் இதனைத் தெரிவித்தார். ''இஸ்ரேலின் பாதுகாப்பும் வெளியுறவுக் கொள்கையும்'' என்ற தலைப்பில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

1967 இல் கோலன் குன்றுப் பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றியது. இதனைத்திருப்பித் தருமாறு சிரியா இஸ்ரேலிடம்வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இர்ஷாத்ரபீன் இத்தகைய அறிவிப்பைத்தெரிவித்துள்ளார் வாஷிங்டனில் நடைபெறும் மேற்காசிய அமைதிப் பேச்சு வார்த்தைகளின் போது சிரியா ஒப்பந்தம் ஒன்றில் கையெழுததிடுமா என்றும், இதுகுறித்து அறிய டெல்அவிவ் விருப்பம் கொண்டுள்ளதாகவும் ரபீன் தெரிவித்தார்.

---

தது 1800 பேர் வரையில் இரு வாரங்களுக்குள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

காபூல் நகரில் வாழ்ந்த 15 இலட்சம் மக்களில் ஒரு இலட்சத்து 26ஆயிரம் மக்கள் வெளியேறியுள்ளதாகவும் இறந்தவர்களிடையே பெண்களும், சிறுவர்களுமே கூடுதலாக காணப்பட்டதாகவும் ஐக்கிய நாடுகள் சபை கடந்த ஞாயிறன்று அறிவித்தது.

தற்போது நடைபெறும் மோதல்களினால் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் உதவும் அவசர நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளது.

காபூலில் காணப்பட்ட 17 ஆஸ்பத்திரிகளில் எட்டு ஆஸ்பத்திரிகள் மாத்திரமே இயங்குவதாகவும் அங்கு கடமையிலீடுபட்டுள்ள சில டாக்டர்கள் நீர், மின்சாரம், மயக்கமருந்து பண்டேஜ் தட்டுப்பாடுகளிடையே பணிபுரியும் அவலநிலை காணப்படுவதாக ஐ நா செயலாளரின் பிரத்தியேகத் தூதுவர் சொடிரியஸ் மௌசொரிஸ் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'நியூயோர்க் டைம்ஸ்' நிருபர் வெளியேற்றப்பட்டார்

பஜாலூகாவில்உள்ள சேர்பியர்களின் தடுப்புக் காவல் முகாம்களில் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகளையும், படுகொலைகளையும் தகவல் சேகரித்து வந்த ''நியூயோர்க் டைம்ஸ்'' நிருபர் சக் சுடெடிக்வெளியேற்றப்பட்டாரென அமெரிக்க வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது.

ஏ. பி. ஸி. நியூஸ் நிருபர் டேவிட் கவ்லான் சரஜிவோவில் சுட்டுக்கொல்லப்பட்ட சமயத்திலேயே சுடெடிக் வெளியேற்றப்பட்டுள்ளார்.

பால்கன் மோதலில் இதுவரை 30 வெளிநாட்டு நிருபர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கப்லானே இங்கு கொல்லப்பட்ட முதலாவது அமெரிக்க நிருபராவார்.

பொஸ்னியா-ஹெர்சகோவியாவில் உள்ள அகதிகள் முகாமைப்பார்வையிட சர்வதேசப் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படுவர் என சேர்பியத் தலைவர்கள் அறிவித்துள்ள சமயத்திலேயே அமெரிக்க நிருபர் வெளியேற்றப்பட்டுள்ளார். இந்நடவடிக்கை அமெரிக்காவிற்கு ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளது

தடுப்பு முகாம்களில் ஆயிரக் கணக்கானோரை சேர்பியப் படைகள் கொலை செய்தும், சித்திரவதை செய்தும் வருவதை அமெரிக்க உளவுப் பிரிவினர் தெரியப்படுத்தி உள்ளபோதும் புஷ் நிர்வாகம் இதனைப் பகிரங்கப்படுத்தவில்லையென ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் பில் கிளிண்டன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஈழநாதம்

## கட்சியிலுள்ள அதிருப்தியாளர்களுக்கு
# அவதானமாக நடந்து கொள்ளுமாறு ஜெயலலிதா எச்சரிக்கை

''அ.தி.மு.க.வுக்குள் இருக்கும் அதிருப்தியாளர்களும் அவர்களுக்கு அனுசரணையாகச் செயற்படுபவர்களும் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதே புதுடில்லி பேச்சுக்களின் செய்தியாக இருக்கிறது.''

இவ்வாறு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா புதுடில்லி விமான நிலையத்தில் தன்னைச் சந்தித்த பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

தமிழ் நாடு காங்கிரசிற்குள் இருக்கும் ஒரு பிரிவினரின் உதவியுடன் அ.தி.மு.க. விற்குள் அதிருப்தியை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் பின்னணி குறித்து ஆராய இந்தியப் பிரதமர் நரசிம்மராவைச் சந்திக்க ஜெயலலிதா புதுடில்லி சென்றிருந்தார் என்பது தெரிந்ததே. இவர் பிரதமரைச் சந்தித்த பின்னர் புதுடில்லி விமான நிலையத்தில் பத்திரிகையாளர் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

முன்னாள் அமைச்சரும் தற்போதைய எம்.எல்.ஏ. யுமான ராஜாராமின் நடவடிக்கைகளுடாக அ.தி.மு.க விற்குள் அதிருப்தியாளர்களைத் தோற்றுவிப்பதற்கு காங்கிரசில் ஒரு பிரிவினர் முயற்சிப்பதாக வெளியாகும் செய்திகள் பற்றி ஜெயலலிதாவிடம் நிருபர்கள் கேட்டபோது ''காங்கிரசுக்கு இதில் எந்த பங்கும் இல்லை. இருக்கும் என்றும் நான் கருதவில்லை.'' என்று பதில் அளித்தார்.

தமிழ் நாட்டில் அ.தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி தொடருமென்று பிரதமர் நரசிம்மராவ் உறுதியளித்துள்ளார். எனது கட்சிக்குள் அதிருப்தியாளர்கள் இல்லை. அ.தி.மு.க எம்.எல்.ஏ.க்களும், எம்.பி.க்களும் தலைமைத்துவத்துக்கும், கட்சிக்கும் முற்றிலும் விசுவாசமாக இருக்கிறார்கள் என்றும் ஜெயலலிதா கூறினார்.

தமிழ் நாடு காங்கிரசின் மூப்பனார் பிரிவினர் அ.தி.மு.க.வுக்குள் அதிருப்தியாளர்களைத் தூண்டிக்கொண்டிருக்கிறார்களா எனக் கேட்டபோது,

காங்கிரசிற்குள் இருக்கும் பிளவுகள் பற்றி நான் கணக்கில் எடுப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. அகில இந்திய காங்கிரசின் தலைவரான நரசிம்மராவுடனும், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவரான வாழப்பாடி ராமமூர்த்தியுடனும் நல்ல உறவுகளை நான் பேணி வருகின்றேன் என்றும் பிரதமர் ராவ் என்ன சொல்லுகிறார் என்பதையே நான் கருத்தில் எடுப்பேன். காங்கிரசில் உள்ள மற்றவர்கள் பற்றி எனக்கு கவலையில்லை என்றும் கூறினார்.

அ.தி.மு.க. அரசை சீர்குலைக்க ராஜாராமுடன் சேர்ந்து ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி அந்தரங்கமாக செயற்படுகின்றாரா? என்று கேட்கப்பட்டபோது,

''சுப்பிரமணிய சுவாமியை கணக்கில் எடுப்பவர்கள் நாட்டில் வெகு சிலரே, அவர் தமிழ் நாட்டில் முயற்சித்துப் பார்க்கட்டும் அது சிலவேளை அவரது வாட்டர்லூவாக இருக்கும்'' என்றும்,

''நான்தான் மாநிலத்தின் உள்துறை அமைச்சராகவும் இருக்கிறேன். ஒவ்வொருவரது நடவடிக்கைகளைப் பற்றியும் அறிக்கைகளை நான் பெறுகின்றேன். ஆகவே இது சாத்தியமில்லை'' என்றும் ஜெயலலிதா பதிலளித்தார்.

# ஜெயலலிதாவை சந்திக்க முன் மூப்பனாரை ராவ் சந்தித்தார்

[சென்னை]

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கும் இடையேயான சந்திப்பிற்கு முன்னதாக ஜி.கே. மூப்பனார் தமிழ் நாட்டு நிலைவரத்தை நரசிம்மராவுக்கு முதல் நாள் இரவு விளக்கிக் கூறியிருந்தார் என இந்தியப் பத்திரிகைகள் தகவல் தெரிவிக்கின்றன.

கறுப்பையா மூப்பனார் பின்வரும் தகவல்களை ராவிடம் தெரிவித்திருந்தார் என்றும் [illegible] டுள்ளன.

தமிழகத்தில் காங்கிரஸ் எதிர்க்கட்சியின் பங்கையாற்ற வேண்டும். எதிரியின் பங்கையல்ல எதிர்க்கட்சியாக உகந்த முறையில் செயற்படா விட்டால் காங்கிரஸ் மக்கள் மத்தியில் அதன் ஆதரவை இழந்துவிடும். அத்துடன் அ.தி.மு.க.மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்து வருகிறதென்று தெரிவித்ததாகவும் மாநில அரசியலில் மூப்பனாருக்கு விசுவாசமானவர்கள் பத்திரிகையாளரிடம் [illegible]

காங்கிரஸ் ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக செயற்படாவிட்டால் தி.மு.க. அந்தச் சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் என்றும் கூறினாராம்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கின் இன்றைய நிகழ்ச்சியில் எஸ். கண [illegible]

# மிதிவெடியில் சிக்கிய இளைஞர் காயம்

(கிளிநொச்சி)

இராணுவத்தால் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடி வெடித்ததனால் இளைஞர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தால் கைவிடப்பட்ட கிளிநொச்சி இராணுவ முகாமில் உள்ள சிலிப்பர் கட்டையொன்றைத் தூக்கிய இளைஞரே காயமடைந்தார்.

செல்லையா ரவிச்சந்திரன் என்ற இளைஞர் திடீர் என்று வெடித்த மிதிவெடியினால் இடது கையின் மூன்று விரல்களை இழந்தார்.

இவர் வைத்திய சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (தி)

# பாக். உலங்கு வானூர்தியை இந்தியா சுட்டு வீழ்த்தியது

(லண்டன்)

பாகிஸ்தானிய இராணுவ உலங்கு வானூர்தி ஒன்று காஷ்மீரிலுள்ள இந்தியப் படையினரால் இரண்டு வாரங்களுக்கு முன் சுட்டு வீழ்த்தப்பட்டதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

அந்த உலங்கு வானூர்தியில் பயணம் செய்த பாகிஸ்தானிய பிரிகேடியர் ஒருவரும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்திய வான் எல்லைக்குள்ளேயே இச்சம்பவம் நடந்துள்ளது. உலங்கு வானூர்தியின் பாகங்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் வீழ்ந்தன.

சியாசிம் எல்லைப் பகுதியில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டிருந்த போதே இவ் உலங்கு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டதென அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் இரு நாடுகளினதும் அதிகாரிகள் கூடிப் பேசியதை அடுத்து நிலைமை சீரடைந்து விட்டதாக சரத்பவார் மேலும் தெரிவித்தார்.

ஈராக்கின் பிரதேசத்தில்

# விமானம்பறக்ககூடாதபகுதி மேற்கு நாடுகள் பிரகடனம்

ஈராக்கின் வடபகுதியை அமெரிக்கா, பிரான்ஸ், மற்றும் பிரிட்டன் நாட்டுப் படைகள் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளன.

இப்படைகள் ஈராக்கின் தென்பகுதியையும் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரும். ''விமானங்கள் பறக்கக் கூடாத பகுதி'' எனும் திட்டம் குறித்த அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இன்று வெளியிடுவார் என அறியவருகிறது.

இதன்படி ஈராக்கின் மத்திய பகுதி மட்டுமே ஜனாதிபதி சதாம் குசேனின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் வடக்கு தெற்கு பகுதிகள் மேற்கத்தைய படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்.

இதேசமயம் ஈராக்கிடம் உந்துஎறி ஏவுகணைத்திட்டம் இருப்பதற்கான முக்கிய தடயங்களை ஐ.நா. சபையின் ஆயுத நிபுணர் குழு கண்டுபிடித்துள்ளது. அடுத்த கட்ட ஆயுதப் பரிசோதனைக்காக இக்குழு எதிர்வரும் திங்கட்கிழமை ஈராக் வரவுள்ளது எனவும் தெரியவருகிறது.

# பெற்றோல் நிலையத்தில் 2 இலட்சம் ரூபா கொள்ளை

கொலன்னாவ கொட்டிக்காவத்த பெற்றோல் நிலையத்தினுள் துப்பாக்கியுடன் புகுந்த இரண்டு நபர்கள் காசாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு 2 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என தெரியவருகிறது.

மேற்படி சம்பவம் கடந்த 24ஆம் திகதி காலை இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்தே இக்கொள்ளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காயமடைந்த காசாளர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# தமிழீழக் கோரிக்கை சரிஎன்று ஆகிவருகிறது

## யாழ். மாவட்ட எம்.பி.

(கொழும்பு)

யுத்தம் இப்படியே நீடித்தால் தமிழீழம் சரி என்ற முடிவிற்குவர நேரிடும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு இந்த வருடத்தில் ஒரு முடிவை எடுக்கும் எனத் தெரியவில்லை என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. நவரத்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தொடர்கையில்; ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்தபோது இந்தியப்படையை வரவழைத்தார்.

இதே கட்சியின் மற்ற ஜனாதிபதி இந்தியப்படையை விரட்ட விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார்.

இன்று இந்த நாட்டில் ஒரு இலட்சம் பேர் வரை கொல்லப்பட்டும் காணாமல் போயும் உள்ளனர். நாட்டில் இப்போது நேர்மையாக தேர்தல்கள் நடப்பதில்லை. பத்திரிகையாளர்கள் நிம்மதியாக செயற்பட முடிவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

# கிராம பாடசாலைகளில் கல்வி சீர்குலைவு

(வவுனியா)

வவுனியா கிராமப்புற பாடசாலை மாணவர்களின் கல்வி நிலை தொடர்ந்து சீர்குலைந்துள்ளது. கல்வித் திணைக்கள அதிகாரிகள் அக்கறையீனமாக உள்ளனர்

கல்வியில் அக்கறையுள்ள பல சங்கங்களும் அமைப்புகளும் மாணவர்களின் கல்வி நிலைபற்றிக் கல்வித் திணைக்களத்திற்கு விசனம் தெரிவித்த போதிலும் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்வதில் பின்நிற்கின்றனர்.

சில அதிகாரிகள் கிராமப்புற மாணவர்களை நகரப் பாடசாலைகளில் கல்வி கற்கும்படி அறிவுறுத்துகின்றனராம்.

நகரப் பகுதி பாடசாலைகளில் மாணவர்களை மிஞ்சும் அளவிற்கு ஆசிரியர்களின் தொகை அதிகரித்திருப்பதையும் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதற்கு - விரும்புவோரைத்தான் எம்மால் இடமாற்றம் செய்ய முடியும் என்று சில அதிகாரிகள் கூறி வருகின்றனராம். (தி)

# எனது அரசாங்கத்தில் துஷ்டர்களுக்கு இடமில்லை

(பண்டாரவளை)

அன்று உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு கல்லெறிந்தும் கூச்சலிட்டும் இடைஞ்சல் செய்தவர்கள், அறிஞர்களை தாக்கியவர்கள், யாழ்ப்பாண நூல [illegible]

இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பண்டாரவளையில் நடைபெற்ற பொதுக்கூட்ட மொன்றில் பேசும் போது குறிப்பிட்டார்.

# லலித் கட்சியினர் மீது எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிராக கடந்த ஆண்டு சிறிலங்கா பாராளுமன்றத்தில் குற்றவியல் நீதிவிசாரணை மனு கொண்டுவரப்பட்ட தினத்தை நினைவுகூரும் முகமாக நாளை கொழும்பில் ஊர்வலம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இவ் ஊர்வலத்தை ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி ஒழுங்கு செய்துள்ளதுடன் ஏனைய ஆறு எதிர்க்கட்சிகளினதும் ஆதரவைக் கோரியுள்ளது

இதுகுறித்து ஆராய கடந்த புதனன்று சிறிமாவோ பண்டாரநாயக்காவின் றொஸ்மிட் பிளேஸ் இல்லத்தில் கூடிய ஆறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இவ் ஊர்வலத்தை [illegible] முழுப் புகழையும் தானே அடையப் பார்க்கிறது எனக் குற்றம் சாட்டினர்.

இவ் ஊர்வலத்தில் கலந்து கொள்ள ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகரான லலித் அத்துலத்முதலி ஐரோப்பாவிலிருந்து நாடு திரும்பி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

---

முஸ்லிம்

[illegible] கும் சாத்தியமானதல்ல என தமிழ் கட்சிகள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ள யோசனையில் குறிப்பிட்டுள்ளன.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

வரும் தகவல்களை ராவிடம் தெரிவித்திருந்தார் என்றும் அப்பத்திரிகைகள் குறிப்பிட் மூப்பனாருக்கு விசுவாசமான வர்கள் பத்திரிகையாளரிடம் தெரிவித்தனர்.

# சுவாமியின் புரளிக்கு ஜெயலலிதா மறுப்பு

(சென்னை)

பாரிஸிலும், சிங்கப்பூரிலும்விடுதலைப்புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளைத் தம்முடைய பிரதிநிதி சந்தித்ததாகவும், தமிழகத்தில் விடுதலைப் புலிகள் நடவடிக்கை மீண்டும் அதிகரித்திருப்பதாகவும் ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி நேற்று முன்தினம் செய்தியாளரிடம் பேசும்போது தெரிவித்த குற்றச்சாட்டை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மறுத்திருக்கிறார்.

ஜெயலலிதா நேற்றுச் சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், புலிகள் ஆபத்தைத் தான் வேரோடு களைவதில் எந்தத் தயக்கமும் காட்டவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

இந்த இயக்கத்தை ஒழிப்பதற்காகச் சென்ற ஆண்டு மக்கள் வழங்கிய தீர்ப்பிற்குத் தான் துரோகம் செய்யவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அரசையும், அதை நடத்தும் தன்னையும் இழிவுபடுத்துவதற்காகவே அரசியல் எதிரிகள் இப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சுமத்துவதாகவும் கருத்துத் தெரிவித்திருக்கிறார். இதனால் பெரிதும் வருத்தமடைந்திருப்பதாகவும் குறிப்பிட்ட செல்வி ஜெயலலிதா, தமிழக அரசு ஒரு சிலரின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்பதாக டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்த குற்றச் சாட்டையும் மறுத்திருக்கிறார்.

# ஒரே தினத்தில் நடைபெற்ற 40ஆயிரம் திருமணங்கள்

(சியோல்)

தென்கொரியாவில் ஒரே நாளில் நாற்பதினாயிரம் வீடுகளில் திருமணம் நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சியோல் நகரில் 1988 இல் ஒலிம்பிக் நடைபெற்ற மைதானத்தில் பல்லாயிரக்கணக்கான மணமக்கள் கூடியிருக்க மீன்சூங்மியூன் என்பவரின் தலைமையிலான சமயப் பிரிவொன்று புகைப்படங்களைக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட ஜோடிகளுக்கு திருமணங்களை நடாத்தி வைத்தது.

பல தம்பதிகள் ஒருவரை ஒருவர் முன்னரே பார்த்ததில்லை வெள்ளைநிற உடை அணிந்த மணமக்களும் ஒரே வண்ணத்தில் மணக்கோலம் பூண்டிருந்த மணப்பெண்களும் மோதிரம் மாற்றிக் கொண்டனர்.

இதேவேளையில் உலகின் வேறுபகுதிகளில் உள்ள 10 ஆயிரம் தம்பதிகளுக்கு இந்த சமய அமைப்பு செய்மதிகளின் உதவியுடன் திருமணங்களை நடாத்தி வைத்தது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கின் இன்றைய நிகழ்ச்சியில் எஸ். கணபதிப்பிள்ளை பாட உள்ளார். இவருக்கான பக்கவாத்தியக் கலைஞர்களாகவயலின் ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களும், மிருதங்கம் கே கண்ணதாசன் அவர்களும் பங்கேற்கின்றனர்.

★ ★ ★

நல்லை ஆதீனத்தில் ஆனைப்பந்தி யாழோசை மன்றம் வழங்கும் இசைவிழா நான்காம்நாள் நிகழ்ச்சிகள் மாலை 6.35மணிக்கு ஆரம்பமாகும். 7.00 மணிக்குவயலின் இசை நிகழ்ச்சியும் 7.45க்கு வீணாகான இசையும் இடம்பெறும் இதில் பங்கேற்கும் கலைஞர்களாக கே. முகுந்தன் எஸ் சிவகுமார். வர்ணராமேஸ்வரன், மகாதேவசுந்தரேஸ்வர சர்மா. சி. துரைராஜா எஸ் சிவகுமார் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

# செஞ்சோலை இசைமாலை

செஞ்சோலைச் சிறார்களும் போராளிகளும் இணைந்து வழங்கும் இசைமாலை நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்திலும், ஞாயிறன்று மானிப்பாய் மாவீரர் கலையரங்கத்திலும், திங்களன்று யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் பிற்பகல் ஏழு முப்பது மணியளவில் நடைபெறவுள்ளது.

# பெற்றுக் கொள்ளவும்

க. மகேந்திரன் என்பவரால் கோயில் வீதியில் திறப்புக் கோர்வை கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் ஆதாரம் கூறிப் பெற்றுக் கொள்ளவும்.

தவர்கள், அறிஞர்களை தாக்கியவர்கள், யாழ்ப்பாண நூலகத்தை தீயிட்டுக் கொளுத்தியவர்கள் இன்று ஐ தே கவில் இல்லை இத்தகைய துஷ்டர்களுக்கு எனது ஆட்சியில் இடமில்லை.

## சினைப்பர்

மேற்கொண்ட சாமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தின் போது சி. சுதாகரன் (வயது 22) என்பவர் கையில் படுகாயமடைந்தார்.

காயமடைந்த இவ் இருவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

## மதில் இடிந்து

சேரி.

மேற்படி மதில் ஏற்கனவே விமானக்குண்டு வீச்சினால் அடி அத்திபாரம் வெடிப்புற்ற நிலையில் இருந்தது எனத் தெரியவருகின்றது.

(பா) (14) (24)

## மீன் பிடிக்கச்

பெருமளவு மீனவர்கள் அப்பகுதியில் கடலுக்குச் செல்வதுண்டு இந்தத் தோணி மட்டும் இன்னும் கரை திரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

## படைகளின்

தற்போதைய நிலையிலேயே 2,000 கோடி ரூபாவிற்கு மேலாக பாதுகாப்பு செலவினம் சென்றுவிட்ட நிலையில் புதிய தளபாடங்கள் உடன் கொள்வனவு செய்யக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை. அத்தோடு, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பனவற்றிடம் இருந்தும் எதிர்பார்த்த கடன் கிடைக்காமையினால் புதிய தளபாடங்களை கொள்வனவு செய்து வாங்க முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பேசும் போது குறிப்பிட்டார்.

## பிறப்பு இறப்பு

வரும் நியமிக்கப்பட்டுப் பணியாற்றுவார்கள். காணிப் பதிவு அலுவலகங்களில் காணிப் பதிவுகள் சம்பந்தமான நடவடிக்கைகள் இடம் பெறும்.

(25)

## குமார்

தாசா கொட்டகலயில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இதேசமயம் அண்மையில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் ஜனாதிபதி பிரேமதாசாவை சந்தித்துப் பேசிய பின்னர் பிரேமதாசாவைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டமை தெரிந்ததே.

## கேட்பதெல்லாம்

யாது.

எனவே வடக்கையும், கிழக்கையும் ஒன்றிணைக்க நடைபெறும் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற இடமளிக்கக் கூடாது. அதேபோல புலிகளோடு சமாதான உடன்படிக்கை காணப் பேச்சுவார்த்தை நடத்துவதும் அர்த்தமற்ற செயலாகும் என்றும் காமினி ஜெயசூரியா மேலும் தெரிவித்தார்.

## இந்திய

பதி ஆர். பிரேமதாசா கொட்டகல சிறிப்பாத கல்விக் கல்லூரியை திறந்துவைத்து உரையாற்றும் போது குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய அவர்,

அமைச்சர் தொண்டமான் இனவாதியும் அல்ல, இந்தியவாதியும் அல்ல அவர் அநீதிக்கு எதிராக போராடும் ஒரு சீர்திருத்தவாதி என்றும் பிரேமதாசா குறிப்பிட்டார்.

ஆறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இவ் ஊர்வலத்தை ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஒழுங்கு செய்ததன் மூலம் குற்றவியல் நீதி விசாரணை மனு கொண்டு வரப்பட்டதால் ஏற்பட்ட

## அடிப்படை

யில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொழுத்தும் வெயிலில் படுத்துறங்குவதை அவதானிக்க முடிந்தது தற்போது வீசும் பலத்த காற்றினால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் குழந்தைகள் முதல் வயோதிபர் வரை மணல் தரையிலே படுத்துறங்குகின்றனர்.

இது தொடர்பாக வயோதிபர் ஒருவரை வினாவியபோது கடந்த ஏழுநாட்களாக தனது உடலில் நீர்படவில்லை எனக் கூறினார் வயல்வெளிகளில் உள்ள கிணறுகளுக்குச் சென்றாலும் அங்கு நீர் அள்ளுவதற்கான வசதிகள் இல்லை எனவும், பலமணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் கூறினார்

[ச]

னையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மட்டக்களப்பு, திருமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உத்தரவாதத்திற்காக மாகாண சபை ரீதியில் முஸ்லிம் பிரதி பொலிஸ்மா அதிபர், முஸ்லிம் பிரதேச சபை மட்டத்தில் முஸ்லிம் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையங்களில் இனரீதியான பொலிஸ் கானஸ்டபிள்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அம்பாறையில் இருந்து மட்டக்களப்பு, திருமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் போன்றஇடங்களிலுள்ள பிரதேச சபைகளை நிர்வகிப்பது நடைமுறையில் சாத்தியமல்ல. முஸ்லிம் பிரதேச சபைகள் தமிழ் பிரதேச சபைகளுக்கு மத்தியில் உள்ளது என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 26-08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5375

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்
42-1059, 42-3368, 41-7273, 42-0962, 42-2323, 42-7975, 24-9676, 22-3611, 26-2941, 42-3339, 24-9597, 26-3017, 42-5556.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:
26-5178, 27-4019, 24-6533, 24-5967, 26-691, 40 7299 26-736, 42-1464, 24-6243, 24-5127, 27-5845, 40-1188, 28-2657, 28-3476, 22-4632, 27-7750, 28-3969, 26-6885